**MCOP. 150/2022 and 152/2022**

**நாள்.20.01.2026**

**எ.ம.சா. 1 – வித்யாதரன்**

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

விபத்து சமயம் Tn 39 cm 5837 என்ற நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு ஊர்ஜிதத்தில் இருந்தது, ஆனால் அந்த காப்பீடு 3ம் நபருக்கு எடுக்கப்பட்டுள்ளது. இறந்த நபர் மற்றும் காயம்பட்ட நபர் எங்கள் நிறுவனத்தை பொறுத்தவரை 3ம் தரப்பினர்கள் என்றால் சரிதான். எங்கள் காப்பீடு நிறுவனம் சார்பில் விபத்து சம்மந்தமாக புலன்விசாணை மேற்கொள்ள அதிகாரி நியமித்திருந்தோம் என்றால் சரிதான். புலன்விசாரணை அதிகாரி தனது அறிக்கையில் வாகனத்தை ஓட்டிய வினித் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா, இல்லையா என்பதை உறுதிப்படுத்த வினித் என்பவரை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரான வினித்துக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றும், எங்கள் காப்பீடு நிறுவனத்தில் நியமிக்கப்பட்ட விசாரணை அதிகாரி சரியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.